1984 மார்ச் 6]

இணைப்பு XIII.

(391 ஆம் பக்க உடுக்குறியிடாத 177— வினா எண் 16164க்கான விடையைக் காண்க.)

கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம், குமரலிங்கம் காவல் நிலைய எல்லையிலுள்ள கொழுமம் என்ற ஊரில் கள்ளத்தனமாக ஒரு சாராய ஆலை இயங்கி வருவதாகக் கோவை ஊரக மாவட்ட மதுவிலக்கு இயங்கும் பிரிவுக் கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு 21-7-1982 அன்று தகவல் கிடைத்தது. உடனடியாக 22-7-1982 அதிகாலை 2-00 மணியளவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தமது ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் கள்ளத்தனமாக இயங்கி வந்த அந்த சாராய ஆலையை முற்றுகையிட்டனர். கார் நிறுத்தும் அந்த இடம் 1/32 எண் கதவிலக்கமிடப்பட்டது. பழனியைச் சேர்ந்த எம். சாகுல் அமீது, வி. எம். சர்க்கரை முகமது மற்றும் முகமது உசேன் என்பவர்களுக்குச் சொந்தமானது. குற்றவாளிகள் இந்த இடத்தை அந்த இடத்தின் சொந்தக்காரர்களிடமிருந்து வாடகைக்கு எடுத்திருந்தனர். குற்றவாளிகளான (1) சேட்டு முகமது, த/பெ. சையது முகமது, பாலசமுத்திரம், இளமம், பழனி மற்றும் (2) பழனிச்சாமி, பழனி ஆகிய இருவரும் வேலம்பட்டை, கள்ளச்சாராயம், அமோனியம் குளோரைடு, சிங்க் சல்பேட், ஊமத்தை விதைகள் ஆகியவற்றிலிருந்து மது கஷாயம் என்ற பெயரில் போதை தரும் பொருளைத் தயாரித்து, பாட்டில்களில் அடைத்து விற்று வருவது தெரிய வந்தது.

இதன் தொடர்பாக குற்றவாளி சேட்டு முகமது கைது செய்யப்பட்டார். மற்றொரு குற்றவாளி பழனிச்சாமி 8-8-1982 அன்று கைது செய்யப்பட்டு எதிர்பார்ப்பு ஜாமீன் பெற்று இருந்ததால், ஜாமீனில் விடப்பட்டார். 13,000 லிட்டர் மது கஷாயம் கைப்பற்றப்பட்டது. மேலும் மதுகஷாயம் தயாரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த வேலம்பட்டை, கருவேலம் பட்டை, கள்ளச் சாராயம், சிங்க் சல்பேட், அமோனியம் குளோரைடு மற்றும் ஏனைய நச்சுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. மதுகஷாயம் ஊற்றி அடைக்க வைக்கப்பட்டிருந்த 1,000 காலி புட்டிகளும் கைப்பற்றப்பட்டன. இந்த மதுகஷாயம் உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடிய நச்சுப் பொருள் கலந்த மதுவகை என்று தெரிந்தவுடன் மாதிரிப் பொருட்கள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு மதுகஷாயம் அனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டது. கோவை ஊரக மாவட்ட இயங்கும் பிரிவு குற்ற எண் 1320/82 பிரிவு 4 (1) (எ) மதுவிலக்கு சட்டத்தின் கீழ் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட குற்றவாளி சேட்டு முகமது, பொள்ளாச்சி உப கோட்ட நீதிமன்ற நடுவர் முன்பு ஆஜர்படுத்தப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். மாதிரிப் பொருளாக எடுக்கப்பட்ட 'தச மூல கஷாயம்' பகுதி அறிவியற் ஆய்வுகூடத்திற்கு இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. கோயம்புத்தூர் பகுதி அறிவியல் ஆய்வக உதவி

இயக்குநர் இம்மாதிரிப் பொருட்களில் மயில் துத்தம் (Chloral Hydrat) கலந்து உள்ளதாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாடு மதுவிலக்கு (சட்டம் 4 (1) (எ) R/W 11 (A) பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு முதல் வகுப்பு குற்ற வியல் நீதிபதி (மதுவிலக்கு), பொள்ளாச்சி நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

இணைப்பு XIV.

(396 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 185—வினா எண் 16431க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம். மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி மகாகவி பாரதியாரின் புகழ் பரப்ப வெளிநாடுகளுக்கு கலைக்குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

(ஆ) மகாகவி பாரதியாரின் புகழ் பரப்ப மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவினையொட்டி வெளிநாடுகளில், குறிப்பாக தமிழ் மக்கள் வாழும் இடங்களில், மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நடைபெறும் பொழுது பாரதியாரின் பாடல்கள் அடங்கிய நிகழ்ச்சிகளை மட்டுமே வழங்க மைய அரசின் நிதி உதவியுடன் கலைக் குழுக்களை அனுப்பி வைக்கலாமென்று முடிவு செய்யப்பட்டது. கலைக் குழுக்களை அனுப்பி வைக்கும் மொத்த செலவினத்தில் 50 விழுக்காடு தமிழ்நாடு அரசும, 50 விழுக்காடு மைய அரசிலுள்ள இந்திய கலாச்சார நட்புறவுக் கழகமும் ஏற்றன. இங்கிலாந்தில் இந்திய தூதரகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் திரு. வலம்புரிஜான் அவர்கள் இலண்டனில் 11–2–1982 அன்று மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்ள அனுப்பப்பட்டார்.

(இ) அரசின் முடிவின்படி இலண்டனில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவிற்கும், பிஜி, ஆஸ்திரேலியா, மற்றும் மலேசியாவில் நடைபெற்ற நூற்றாண்டு விழாக்களுக்கும், மொரீஷியஸ் தீவில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவிற்கும் கலைக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

(ஈ) இலண்டனில் 11–12–1982 அன்று நடைபெற்ற விழாவில் பங்கேற்க டாக்டர் பத்மா சுப்பிரமணியம் தலைமையில் [illegible] பேர் அடங்கிய குழு அனுப்பி வைக்கப்பட்டது. ஆஸ்திரேலியா, பிஜி தீவுகள், மலேசியா ஆகிய நாடுகளுக்கு 13–1–1983 முதல் [illegible]2–1–1983 வரை செல்வி உமா தண்டாயுதபாணி தலைமையில் [illegible] பேர் அடங்கிய குழு அனுப்பி வைக்கப்பட்டது. மொரீஷியஸ் தீவுக்கு 4–2–1983 முதல் 14–2–1983 வரை 'பாரதி கண்ணம்மா' நாட்டிய நிகழ்ச்சியினை நடத்த செல்வி வெண்ணிற ஆடை நிர்மலா தலைமையில் 13 பேர் அடங்கிய குழு அனுப்பப்பட்டது.